

சிந்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு-வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி சிவாம்பிகை அருணாசலம்

அவர்களின் சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

15-04-2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சிவமயம்



பிறப்பு 09 . 06 . 1924

இறப்பு 16 . 03 . 2006

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும்,
கொழும்பு - வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி. சிவாம்பிகை அருணாசலம்

## திதிவெண்பா

பார் புகழும் பார்திபமாம்
ஏர்கொண்ட சித்தன்கேணியாம்
பாங்குடன் பங்குனி அபர துதியைதனில்
சீருற சிவாம்பிகை சிவனடிசேர்ந்தனரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# க.அருணாசலம்

தோற்றம்
18.04.1911

மறைவு
20.11.1963

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



சிந்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு-வவுனியாவை

வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி சிவாம்பிகை அருணாசலம்

அவர்களின் சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

15-04-2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
அன்பை சொரிந்து அறிவை ஊட்டி
நற்பண்பை வளர்த்து
அன்புத் தெய்வமாக
எங்கள் மனங்களில் என்றும்
நினைவகலாது
குடி கொண்டிருக்கும் எங்கள் தாயார்
**திருமதி. சிவாம்பிகை அருணாசலம்**
அவர்களின் ஞாபகார்த்தமாக
இம்மலரினை அன்னாரின்
திருப்பாத கமலங்கட்குச்
சமர்ப்பணம் செய்கின்றோம்.



**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் காப்பு

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

# பஞ்ச புராணத் தொகுப்பு

## தேவாரம்

தோடுடைய செவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெ லாம்முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகி திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ புராணம்



**காப்பு**

தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதாவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான்றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள் வாழ்க
ஏகன் அநேக னிறைவ னடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
யெண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்து ளோங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
ஆக்க மளவுறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பருக்கு எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெரமான் வல்வினையேன்றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்குமூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயிற் கடையாயாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் மாரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார்தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமென் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே.
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற்கு கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்திலுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் மேத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்கள்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதேபரிந்தெடுத்துச் - செய்ய இரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள் அளவும்
அந்திபக லாய்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச்சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்?

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்?

நொந்து சுமந்தபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்?

அரிசியோ நான்இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருகியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பு
மானே என அழைத்த வாய்க்கு.

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே உன அழைத்த வாய்க்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்தம்

முன்னை இட்டநதீ முப்பு ரத்திலே
பின்னை இட்டதீ தென்னி லங்கையில்
அன்னை இட்தீ அடிவ யிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே!

வேகுதே தீயதனில் வெந்துபொடி சாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ - மாகக்
குருவி பறக்காமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்தததும்
உன்னையே நோக்கி உகந்துவரம் கிடந்துஎன்
தன்னையே ஈன்றெடுத்த தாய்.

வீற்றிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் - பால்தெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி சிவாம்பிகை அருணாசலம் அவர்களின்

# வாழ்க்கைக் குறிப்பு

ஈழத் திருநாட்டின் சிரசென அமைந்த வடபுலத்தில் சித்தர்கள் வாழ்ந்து ஆசிபெற்ற ஊரான சித்தன்கேணியிலே சு. தம்பிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளுக்கு 1924ம் ஆண்டு யூன் மாதம் 9 ம் திகதி புத்திரியாக **சிவாம்பிகை** அவதரித்தார். இவர் தனது ஆரம்ப கல்வியை சித்தன்கேணி கணேச வித்தியாசாலையில் ஆரம்பித்து, தாவளை தமிழ்ப் பாடசாலையிலும் பின்னர் தரம் நான்கு முதல் வட்டு. இந்துக்கல்லூரியிலும் கல்விகற்றார். 1936ம் வருடம் தந்தையார் தம்பிப்பிள்ளையுடன் மலேசியா சென்றார். அங்கு இவரது பெற்றோரின் இறை வேண்டுதலால் இவரது 13வது வயதில் தம்பியார் சுப்பிரமணியம் (கலோ) பிறந்தார். பின்னர் இவர்கள் 1939ல் இலங்கை திரும்பினார்கள். அதன்பின் இவர்கள் வாழ்க்கை சித்தன்கேணியில் மீண்டும் ஆரம்பித்தது.

இவர் காலம் சென்றவர்களான சங்குவேலி சிறாப்பர் வை. கந்தையா- காசிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த புதல்வனான அருணாசலம் என்பவரை 1941ம் வருடம் ஆவணி மாதம் திருமணம் செய்தார். அதே வருடம் ஐப்பசி மாதம் தனது தந்தையாராகிய தம்பிப்பிள்ளை அவர்களை இழந்தார். பின்னர் 1962ல் தாயார் தங்கம்மாவையும் இழந்தார். பின்னர் யூலை மாதம் 1991ம் ஆண்டு தனது அருமைத் தம்பியாராகிய நில அளவைத் திணைக்களத்தின் உதவி அத்தியட்சராக கடமையாற்றிக் கொண்டிருந்த சுப்பிரமணியம் (கலோ) அவர்களையும் இழந்தார்.

இவரின் திருமணத்தின் பின் நடாத்திய இல்லறத்தின் விளைவால் தோன்றியவர்களே பரந்தாமன், ஆதித்தன், உமாபதி, தண்டபாணி, அருந்ததி (தவம்) என்னும் அன்புச் செல்வங்கள். இவரது கணவர் க. அருணாசலம் அவர்கள் அரச உத்தியோகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றி வந்தார், அவர் பணியாற்றும் இடங்கள் எல்லாம் மனைவி, பிள்ளைகளுடன் தான் செல்வார்கள். இவரது கணவர் கொழும்பு திறைசேரியிலும் பின்னர் கச்சேரியிலும் சிறாப்பராக கடமை புரிந்துவந்த காலத்தில் அனுராதபுரம், மட்டக்களப்பு, மாத்தளை, மாத்தறை ஆகிய இடங்களிலும் கடமையாற்றி, இறுதியாக வவுனியா கச்சேரியின் பிரதம சிறாப்பராக கடமையாற்றிய போது 1963ம் வருடம் நவம்பர் மாதம் 20ம் திகதி காலமானார்.

கணவனின் மறைவினால் இவரது குடும்ப வாழ்க்கையின் முழுச் சுமைகளையும் இவரே சுமக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. பல விதமான இன்னல்களின் மத்தியில் மீண்டும் சித்தன்கேணியில் வாழ்ந்து வரும் காலத்தில் தனது செல்வங்களை நல்வழியில் கற்பித்து அனைவரையும் இல்லற வாழ்வில் இனிதே வாழ வழிவகுத்துக் கொடுத்தார்.

நாட்டின் இன்னல்களின் போது இடம் பெயர்ந்து கொழும்பில் சில காலம் வாழ்ந்து பின்னர் வவுனியாவில் தனது மகளுடன் வாழ்ந்துவரும் காலத்தில் 2006ம் வருடம் மார்ச் மாதம் 16ம் திகதி தனது கணவன் கந்தையா அருணாசலம் அவர்கள் பிரிந்த அதே மண்ணில் இவரும் இவ்வுலகை பிரிந்து விண்ணுலகை அடைந்தார்.

*"பாயிற் படுக்காமல் பத்துநாள் செல்லாமல்*
*மாயக் கடதாசி மடிமேல் விழுந்ததென்ன"*

என்ற நிலையில் நல்ல மனம் படைத்த அவர் அனைவரது அன்பையும், மதிப்பையும் பெற்று நீண்டநாள் இனிதே வாழ்ந்தது இறைசெயலே என ஆறுதல் கொள்வோம். அன்னாரின் ஆத்மா இறைவன் பாதங்களில் சாந்தி பெற இறைவனைப் பிராத்திப்போமாக.

*கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை*
*கணபதி என்றிடக் காலமும் கைதொழும்*
*கணபதி என்றிடக் கருமம் ஆகலாம்*
*கணபதி என்றிடக் கவலை தீர்ந்திடும்*

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள்

**அன்பு அம்மா!!**

எங்கள் அம்மாவின் மறைவு எங்களைத் தாங்க முடியாத ஆழ்ந்த துயரத்தில் விட்டுச் சென்றுள்ளது. அம்மாவின் அன்பை அவ காட்டிய பரிவை நாம் இனி என்றுதான் காண்போமோ! சிறு வயதில் எமது அன்பான தந்தையை இழந்த எங்களை அதன் தாக்கத்தை தெரியவிடாது, தாய்க்குத் தாயாகவும், தந்தைக்குத் தந்தையாகவும் இருந்து எவ்வளவோ கஸ்ட்டங்களுக்கு மத்தியில் எங்களை பிறர் போற்ற வளர்த்தெடுத்து ஆளாக்கி தனி ஒருவராக நின்று எங்கள் எல்லோருக்கும் நிறைந்த இல்லற வாழ்வை அமைத்துத் தந்து மகிழ்ந்திருந்தீர். இறுதியில் எந்தக் கவலையும், எவ்வித ஏற்றத் தாழ்வுமின்றி நோய் நொடியுமில்லாத அதி உன்னத சொர்க்கத்திற்கு சென்றுவிட்டீர். வவுனியாவில் எம்மை விட்டுப் பிரிந்த எங்கள் தந்தையிடம் 43 வருடங்களின் பின் அவர் பிரிந்த வவுனியா மண்ணிலேயே எம்மை எல்லாம் தேம்பியழ வைத்துவிட்டு நீண்ட தூரம் போய்விட்டீர். உங்களை வழியனுப்ப எங்கள் எல்லோரையும் தடங்கலின்றி வரவழைத்தீர். அம்மா நீங்கள் நீண்ட பயணம் சென்றாலும் என்றும் எங்கள் மனதில் அணையாத ஜோதியாக வீற்றிருப்பீர். உங்கள் புன்னகை ததும்பிய முகம் என்றும் எம்முன் நிழலாடும்.

**உங்கள் பிரிவால் துயறுரும்**
**பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மகள்

உள்ளம் உருகுதம்மா! உதிரம் கொதிக்குதம்மா!
உங்கள் பிரிவைத் தாங்காது உலகே இருளுதம்மா!
அன்பின் பிறப்பிடமே! பாசத்தின் திருவிளக்கே!
உம்மை மெழுகாக்கி எமக்கு ஒளியைத் தந்தவளே!
மரணம் மனிதனுக்கு நிச்சயம் உண்டெனினும்,
மரணத்தை வெல்லாது மௌனமாய் போனீரோ!
ஐயையோ என்ன செய்வேன்? யார் துணை இனி எமக்கு?
அமைதியாய் நீர் சென்று, இறைவனடி சேர்ந்திருப்பீர்! - என
ஆறுதல் அடைகின்றேன்.

## பெறா மக்கள், மருமக்கள்

மாமி என்போமா? பெரியம்மா என்போமா?
எவர்தான் இருந்தாலும் எம்மில் - நீர்
கொண்ட பாசத்திற்கு ஈடு இணை ஏது?
உன்பிள்ளை, பிறர்பிள்ளை என்ற பேதம் அற்றவரே!

எம்மை அரவணைக்கும் கைகள் எங்கே?
ஆதரிக்கும் வார்த்தை எங்கே?
உறுதுணையாய் இருந்து எங்கள் குடும்பம்
தளைத்தோங்க அன்பால் பிணைத்து வைத்தீர்

கனிவான உம் பார்வையினை – நாம்
கனவிலேனும் இனிக் காண்போமோ?
தெய்வத்துடன் சங்கமித்த மாமி! பெரியம்மா!
உங்கள் ஆத்ம சாந்தி வேண்டிப் பிராத்திப்போம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப் பிள்ளைகள்

நாங்கள் அம்மம்மா! அப்பாச்சி! என்றழைப்போம்
எங்கள் மழலை மொழி கேட்டு மகிழ்ந்திருந்தீர்களே!
அன்புக் கரம் நீட்டி எம்மை அள்ளி அணைத்திருந்தீர்.
உங்களை வந்து பார்த்து நாம் உள்ளம் மகிழ்ந்திருந்தோம்
எமக்கு கவலைகள் தந்துவிட்டு எங்கு காணாமல் போனீர்கள்?

அம்மம்மா! உங்கள் பிரிவுதனை எம்மால் ஜீரணிக்க முடியவில்லை
உண்ணவும் முடியவில்லை, உறங்கவும் முடியவில்லை
வாசலில் காத்திருந்து எம்மை வரவேற்க நீங்களில்லை
சுகமாக்கி வருவதாக எல்லோர்க்கும் சொல்லிச் சென்றீரே!
உங்கள் வரவுதனை நாம் எல்லோரும் பார்த்திருந்தோம்

ஊரே அசந்து நிற்கும் உத்தமியே அம்மம்மா !!
ஏன் திரும்ப வரவில்லை? நாம் என்ன குறை விட்டிருந்தோம்?
ஏமார்ந்த எம் ஊமை விழிகளுக்கு உரம் கொஞ்சம் ஏற்றுங்கள்.
உங்கள் பிரிவை தாங்கும் தைரியத்தைத் தாருங்கள்.
உம் ஆத்மா சாந்திபெற நாம் நித்தம் நித்தம் வேண்டி நிற்போம்.

## உற்றார் உறவினர்

சிந்தை கவர்ந்த சிறந்தவளே!
சீரான உம் பேச்சும் - யாவரையும்
சிறப்பாய் வரவேற்கும்
சிந்தித்துச் செயலாற்றும் திறனும் - எம்
சிந்தையில் நிற்குதம்மா
மூத்தக்கா, பெரிக்கா என்றழைக்க - எம்
குடும்பங்களில் மூத்தவள் நீர்
சித்தம் கலங்குகின்றோம் - உம்
சிரித்த முகம் கண்டிடவே
நித்தம் நித்தம் வாடுகின்றோம் - மீண்டும்
உங்களைக் கண்டிடவே
வருவோரை ஆதரித்து – உம்
புன்னகையால் வரவேற்பீர்
உம் பிரிவைத் தாங்க முடியாமல்
கதறுகின்றோம் கேளாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரம் ஒன்று சாய்ந்தது மதியும் மறைந்தது
இருள் சூழ்ந்த உலகினிலே இங்கு நாம் தவிக்கின்றோம்
மாமி என்றழைத்தால் அது மருமக்கள் நிச்சயம்
மாற்றான் தாய் பார்க்க மாட்டீர் மகிழ்ந்தெம்மை அணைத்திடுவீர்
மறு பேச்சு யாமறியோம் எம் காதில் கேட்டதில்லை
மாமாவின் பிரிவை எல்லாம் மதியோடு தாங்கிநின்றீர்

தம்பியுடன் நீர் கூடி தரணி போற்ற வாழ வைத்தீர்
தலைவிதியை நோக மாட்டீர் தாராள மனம் உமக்கு
தடுதடுத்த வயதினிலும் தளராத நெஞ்சம் தான்
தளைத்த மரம் தலை சாய்ந்தது ஏனிங்கு?
மச்சாள் உறவுதனை அவசரமாய் மறந்ததேனோ?
மறைந்த செய்தி கேட்டு அடியற்ற மரமானோம்

அப்பனை இழந்த வேளை ஆறுதல் நீர் தந்தீர்
அனாதைகளாய் நிற்கின்றோம் நாமிங்கு
அன்னம் ஊட்டிய கை எங்கே? ஆதரவுத் தூண் எங்கே?
அலுத்துக் கொள்ளாமல் எம்மை அள்ளித் தாங்கிய மடி எங்கே?
மழலைகள் என்றால் மாமிக்குக் கொண்டாட்டம் - உம்
மடியினிலே தூங்க வைத்த மழலைகள் ஏராளம்

பழம் கதைகள் பல கூறி பல செய்தி அறிய வைப்பீர்
சுகதுக்கம் பார்க்க மாட்டீர் சுற்றத்தார் சூழ நிற்பீர்
சுரண்டல்கள் எதுவுமில்லை சுமையினிலே இனிமை கண்டீர்
அக்காவின் அப்பம் தோசை என்றால் தம்பிக்குக் கொண்டாட்டம்
மாமியின் சோற்றுக் குழையல் மரு மக்களுக்கு ருசியாட்டம்
ஊறுகாய் சேர்த்து உருண்டையாக உண்டகாலம் இனிவருமோ?

தீர்க்க தரிசியாய் எம்முன் நீர் இருந்து தீஞ்சுவை ஆக்கித் தந்தீர்
தெவிட்டாத ஞானம் அறிய வைத்து தேவைகளை பூர்த்தி செய்தீர்
மரணிப்பார் வரிசையிலே பலர் உண்டு — அதில்
மாமீ நிங்கள் மறையவில்லை — எங்கள்
மனதில் என்றும் வாழ்வீர்கள் - உங்கள்
ஆத்மா சாந்தி பெற நாம் அனைவரும் பிராத்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை உருவம், தீர்க்கமான பார்வை
புன்னகை தவழும் முகம்
நீ தான் **"எம் அம்மம்மா"**
வாசலில் மணி அடிக்கும் போதெல்லாம்
"வாங்கோ" என வரவேற்பாய், சிரிப்புடனே! — நாம்
உம்மை இறுதியாக அனுப்பி வைத்தோம் அழுகையுடன்.

வீட்டை விட்டு நீர் சிகிச்சைக்குச் செல்லும் போது
நாம் உறுதியாய் தான் இருந்தோம்
திரும்புவாயென எண்ணியே எம் எழுவருடன் - அயலவரும்
சிகிச்சை பெற அனுப்பி வைத்திருந்தோம்.
"போட்டு வாரேன்" என்றாய் எல்லோர்க்கும் - ஏனோ...
அன்று மட்டும் உன் வார்த்தை பொய்யாகிப் போனது?

உன் வாழ்வின் நிறைவை நீ கண்டதாலே
சீக்கிரம் சென்றுவிட்டாயோ?.
இன்னும் நாம் நம்பவில்லை உம்பிரிவை - எம்முள்
உலாவுவதாகவே இன்னும் எம் நினைப்பு
நீங்காத உம் உருவம் எம்முன் தினந் தினம்
நிழலாடுகின்றது
இன்று நாம் உன் மகள் முகத்தில் உம்மைக்
காண்கின்றோம்

ஆறுதல் கூற வார்த்தைகள் இல்லை எம்மிடத்தில்
ஆறாத் துயரில் மூழ்கிவிட்டோம் - நாம்
உன் கடமையை நீ சரியாகவே முடித்தாய்
இறைவன் உன் பிறப்பின் பயனையிட்டு மகிழ்ந்திடுவான்.
உடம்பால் எமை விட்டு நீர் பிரியினும்
உம் நீண்ட ஆசீர்வாதம் போதும் எமக்கு.

**உள்ளம் முழுவதும் உம் நினைவுடன் உலாவரும் ஜீவன்கள்....**
**மூன்றாம் வருட மாணவர்கள்**
**உயிரியல் பிரிவு. வவுனியா வளாகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"**தோன்றிற் புகழொடு தோன்றுக**" என்ற வாக்குக்கமைய புகழோடு பிறந்து புகழோடு வாழ்ந்து, புகழோடு மறைந்த உத்தமி எங்கள் அன்பு மாமி.

எங்கள் அப்பாவின் அருமை அக்காவாகப் பிறந்து, அவரது வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். தம்பியாரின் பெருமைகளைக் கேட்டு மனம் பூரிப்பார்.

எமது அம்மாவிற்கு அம்மாவாக மருமக்களை மகளாக நோக்கிப் பாசம் பொழிந்தார். யாராவது மனச் சோர்வாக இருந்தால் ஆறுதல் கூறி உற்சாக மூட்டுவார். எமது குடும்பத்தின் மூத்த அன்னை மாமியே. எந்த ஒரு நற்காரியமாக இருந்தாலும் மாமியிடம் கூறி ஆசி பெற்றே தொடங்குவோம். அண்ணா சகோதரிகள் கூட வெளிநாட்டில் இருந்து வந்தாலும் மாமியிடம் போகாமல் திரும்புவதில்லை. அவ்வளவு தூரம் அன்பான மாமியாக அவரது செயற்பாடுகள் இருந்தன.

இன்று நாங்கள் அனைவரும் துடுப்பை இழந்தவன் கைபோல கண்ணீர்க் கடலில் தத்தளிக்கின்றோம். அன்பான பண்பான எங்கள் மாமியை இழந்து தவிக்கின்றோம். உங்கள் பிரிவுத் துயரில் இருக்கும் பிள்ளைகள், மருமக்கள், போரப்பிள்ளைகளுடன் சேர்ந்து நாமும் விம்முகின்றோம். மாமி உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அருமைத் தம்பி**
**ஹலோவின் மனைவி**
**சு. பேரின்பநாயகியும்,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**போரப்பிள்ளைகளும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கம்
## CUSTOMS DEPARTMENT HINDU OFFICERS' ASSICIATION
## SRI LANKA CUSTOMS, COLOMBO – 01

சிரேஷ்ட சுங்கப் பரிசோதகர் திரு. ஏ. பரந்தாமன் அவர்களது தாயார் **திருமதி. சிவாம்பிகை அருணாசலம்** அவர்களது மறைவைக் கேள்வியுற்று ஆழ்ந்த துயரமுற்றோம்.

திரு. புரந்தாமன் அவர்கள் கடந்த 33 வருடங்களுக்கு மேலாக சுங்கத் திணைக்களத்தில் சிறந்த சேவையாற்றி வருபவர் மட்டுமல்ல, சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவருமாவார்.

இளைஞராக இருந்த காலந்தொட்டே பரந்தாமன் சுங்க நடவடிக்கைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் பாடுபட்டவர். எமது விழாக்கள், ஆடி வேல் ரத வரவேற்பு, தலைமன்னார், மற்றும் திருமலையில் எமது சமய நடவடிக்கைகள் போன்றவற்றில் அவர் முன்னணியில் நின்று செயற்பட்டதை நாம் கண்டுள்ளோம்.

அவ்வாறாக தனக்கென வாழா பிறர்க்கெனத் தொண்டு புரிந்து வரும் பரந்தாமன் போன்ற சிறந்த சமய சேவையாளரை எமக்குத் தந்த **அமரர் சிவாம்பிகை அருணாசலம்** அவர்களுக்கு கண்ணீருடன் நன்றியையும் சமர்ப்பிக்கிறோம். தாயாரது அனுசரணை பரந்தாமன் அவர்களுக்கு என்றும் இருந்து வந்துள்ளது.

திருமதி அருணாசலம் அவர்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**எம். ஆர். ராஜ்மோகன்**
**கௌரவ பொதுச் செயலாளர்**
**சங்க செயற்குழு சார்பாக**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'A Tribute to our Beloved Aunty'

Already a week has lapsed since our beloved Aunty Mrs. Arunasalam Sivampikai left this world for peace and eternal bliss. It is difficult to believe or accept that she no more. Her pleasant and smiling countenance will always be remembered by those who knew her.

My wife and I came to know the family members and relations of our Aunty twenty five years ago after the marriage of her eldest son Mr. Paranthaman. The friendship between the two families not being a passing cloud continued from Sithankerney to Tellippalai and memorial places Puloli, Nallur, Chunnakam and finally to Colombo. She was a respected lady. We rather marvel at her noble qualities and ready to help and the less fortunate.

She was a deeply religious and soft spoken lady lived up to the preaching. We still recollect the warm welcome which she extended to us when we visited to her residence.

She lived a may faced life. A devoted wife to her husband, beloved mother to her children, and affectionate 'Paddie" to her grand kids and showered her caring love and blessings to every one around her. She was admired for her untiring work and fortitude with which she faced the tests of time.

She had led a full life and her children are well off in foreign countries.

We offer merit and blessings to her.

*Mr & Mrs. S. N. Kanagasegaran J.P*
*"Thelliyoor Sagar"*
*Wellawathai.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் தீர்க்கும் மருந்து தண்ணீரின் அற்புதம்

தண்ணீர் ஒரு சர்வரோக நிவாரணி. சுத்தமான தண்ணீரை 1.26 லீட்டர் (சுமார் 6 டம்ளர்) தினசரி அருந்துவதால் சகல நோய்களும் குணமாகின்றன என்றால் நம்புவதே முதலில் கடினமாகத்தான் இருக்கும்.

முதலில் சுத்தமான தண்ணீரினால் தீரும் நோய்களின் பட்டியலைப் பார்ப்போம்.

தலைவலி, இரத்த அழுத்தம், சோகை, மொழிவாதம், பொதுவான பக்கவாதம், ஊளைச்சதை, மூட்டுவலி, காதில் இரைச்சல், இருதயத் துடிப்பு, மயக்கம், இருமல், ஆஸ்துமா, சளி, சஷயரோகம், மூளைக் காய்ச்சல், கல்லீரல் நோய்கள், சிறுநீரகக் குழாய் நோய்கள், பித்தக் கோளாறுகள், வாய்வுக் கோளாறுகள், வயிற்றுப் பெருமல், இரத்தக் கடுப்பு, மூலம், மலச்சிக்கல், உதிரப்போக்கு, நீரழிவு, கண் நோய்கள், கண் சிவப்பு, ஒழுங்கற்ற மாதவிடாய், வெள்ளை, கருப்பைப் புற்றுநோய், மார்புப் புற்றுநோய், தொண்டை சம்பந்தமான நோய் போன்ற பலவித நோய்களாகும்.

குடல் சுத்தமாக வைக்கப்படும் பொழுது தினந்தோறும் பல தடவைகள் சாப்பிடும் ஆகார வகைகளின் சாரமானது குடலின் உடல்ப் பகுதியிள்ள திசு (Tissu) மடிப்புக்களால் உறிஞ்சப்பட்டு அது புது இரத்தமாக மாற்றப்படுகிறது.

இப் புது ரத்தமானது நோய்களைக் குணப்படுத்தி மீண்டும் புது ஆரோக்கிய நிலையைக் கொடுக்கும் வேலையைச் செய்வதில் அதி முக்கியமானது. அதற்காகத்தான் தண்ணீரை அதிகளவு முறையாக அருந்துவது அவசியமாகிறது.

1. காலையில் எழுந்தவுடன் (பல் கூடத் துலக்குவதற்கு முன்பாகவே) வாயை மட்டும் கொப்பளித்துவிட்டு 1.26 லீட்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீரை (ஆறு டம்ளர்) ஒரே தடவையில் குடித்துவிட வேண்டும்.

2. தண்ணிர் அருந்தியபின் 45 நிமிட நேரம் கோப்பி, தேனீர், மற்றும் எதுவித பானங்களையோ, தீன் பண்டங்களையோ சாப்பிடக் கூடாது.

3. காலையில் தண்ணீர் குடிப்பதற்குத் தயாராகும் வகையில் முதல் நாள் இரவுச் சாப்பாட்டை முடித்தபின் படுக்கைக்குச் செல்லு முன் நரம்பு மண்டலத்தை தூண்டி விடக்கூடிய பானங்களையோ, பொருட்களையோ சாப்பிடக் கூடாது. இந்த நிபந்தனைகள் மிகவும் முக்கியமானவை.

தண்ணீரில் கிருமிகள் கலந்திருக்கக் கூடும் என்று சந்தேகம் இருக்குமானால் அதை முதல் நாள் இரவே கொதிக்க வைத்துக் கொள்ளலாம்.

ஒரே சமயத்தில் ஆறு டம்ளர் தண்ணீரைக் குடிக்க முடியுமா? இது ஆரம்பத்தில் ஒரு சில நாட்களுக்கு சற்று சிரமமாகத்தான் இருக்கும். பிறகு பழக்கத்தில் இலகுவாகிவிடும். இரண்டு அல்லது மூன்று டம்ளர்களில் ஆரம்பித்து நாளுக்கு நாள் ஒவ்வொரு டம்ளர்களாக அதிகரித்து பழக்கப்படுத்திக் கொள்ளலாம். எவ்வளவு முடியுமோ அவ்வளவு குடித்துவிட்டு சற்று நேரம் (இரண்டு நிமிடம்) வேகமாக உலாவியபின் எஞ்சியுள்ள நீரைப் பருகிவிடலாம்.

இந்த சிகிச்சை முறையின் பலனை சில தினங்களில் உணர்ந்து கொள்ளமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணின் மடியில்

1924 ⁂ 06 ⁂ 09



விண்ணின் அடியில்

2006 ⁂ 03 ⁂ 16

அமரர்

## திருமதி.அருணாசலம் சிவாம்பிகை

**(பிரயோக விஞ்ஞான பீட 3ம் வருடமாணவி செல்வி.S.ககன்யா அவர்களின் அம்மம்மா)**

அன்னாரின் பிரிவால் துயரடைந்திருக்கும்

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்

அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்

தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம

சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

அவர்களது துயரில் பங்கெடுக்கின்றோம்

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி !!!**

3ம் வருட மாணவர்கள்
பிரயோகவிஞ்ஞானபீடம்
குருமன்காடு
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.03.2006 அன்று அமரத்துவம் அடைந்த

திருமதி **சிவாம்பிகை அருணாச்சலம்** அவர்களின்

## கண்ணீர் அஞ்சலி




சீர்பூத்த சித்தன்கேணிப் பதியினிலே
உயர் சைவ வேளாள குடும்பந்தனில்,
தம்பிப்பிள்ளை தங்கம்மா பெற்றெடுத்த
அருஞ்செல்வங்களாம் சிவாம்பிகை – கூடவே
தம்பி சுப்பிரமணியம் செல்லப்பெயர் அழைப்பீரே
ஹலோ என்று
கற்பின் கலங்கரை விளக்கே,
கண்ணகியின் இருப்பிடமே,
பொறுமையின் சிகரமே
பெருமையின் மகுடமே,
அனுபவத்தின் அச்சாணியே,
அன்பின் வழியும் நீர்தானே.
புத்திமதிகள் பல கூறி
நிறைகுடமாய் நீர் நின்றீர் – இன்று?....
ஏழைகளின் கண்ணீரில் கடவுளைக் கண்டீர்
இனம், சனம் யாருடனும் பகைமை காணீர்
கோயில், காணிக்கைகள் தாராள உள்ளம்
ஊற்போற்றும் உத்தமியாம் சிவாம்பிகை
பேர் கொண்டு வாழ்ந்த காலம் போதும் என்றோ,
நீர் பெற்றெடுத்த செல்வங்களாம்
பரந்தாமர், ஆதித்தன், உமாபதி, தண்டபாணி,
தவநாயகி, பேரப்பிள்ளைகள், மருமக்கள் கதறியழ
இணையற்ற தம்பியுடன் நீர் உறவு கொள்ள
ஏன் இந்த அவசரம்.....
அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
அதேவேளை குடும்பத்தார்களுக் கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

**இங்ஙனம்**
**Lion S.K. தளையரட்ணம்**
**தந்தை செல்வா நற்பணிமன்றம் கொழும்பு**
**அகில இலங்கை சமாதான நீதவான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி



## நவிலல்

எமது அன்புத் தெய்வத்தின் தீடீர் மறைவில் கலங்கி நின்ற வேளையில் எமக்கு நேரிலும் தொலைபேசி, தந்தி மூலமும் அனுதாபச் செய்தி அனுப்பியும் ஆழ்ந்த துக்கத்தில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும், அவரது இறுதி பயணத்திற்கான ஆயத்தங்கள் செய்து தந்தவர்களுக்கும், ஜெயரட்ண மலர்ச்சாலையினர்க்கும், ஈமைக்கிரியைகளில் பங்கு பற்றியவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், வாகனம் தந்து உதவி புரிந்தவர்களுக்கும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய வைபவங்களில் கலந்து கொண்டு சகல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், வவுனியா வளாக நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் இவ் நினைவு மலரை வெளியிட உதவிய மல்ரிவிசன் அச்சகத்தினருக்கும் எமது உளமார்ந்த நன்றியை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

-இங்ஙனம் -
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது,
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது,
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது,
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.



"இந்தமாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்."
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org